சிறப்புக்குறிப்பு 6

## நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் அடிப்படை ஆண்டை 2021ஆம் ஆண்டாக மாற்றியமைத்தல்

இலங்கையில் அலுவல்சார் நுகர்வோர் விலைச்சுட்டெண்களைத் தொகுக்கும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களமானது அலுவல்சார் நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் அடிப்படை ஆண்டை 2013ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டாக இற்றைப்படுத்தியுள்ளது. சர்வதேச தரநியமங்களுக்கும் சிறந்த நடத்தைகளுக்கும் அமைவாக கிரமமான இடைவெளிகளில் நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் அடிப்படை ஆண்டை மாற்றுவது, சமகால நுகர்வோர் செலவிடும் விதங்களை மிகவும் துல்லியமாகப் பிரதிபலிப்பதற்கு அத்தியாவசியமானதாகும். இதன் விளைவாக, அடிப்படை ஆண்டை மாற்றுவதானது நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் விசேடமாக பொருட்கள் மற்றும் பணிகளைக் கொண்ட கூடையில் உள்ள பொருட்களினதும் பணிகளினதும் முக்கியத்துவத்தினை அல்லது பிரதிநிதித்துவப்படுத்தும் தன்மையினைக் குறித்துக்காட்டுகின்ற நிறை கட்டமைப்பின் முக்கிய அம்சங்கள் தரமுயர்த்தப்படுவதற்கு வழிவகுக்கின்றது. மேலும், பிந்திய நுகர்வு விதத்தின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் புதிய பொருட்களைச் சேர்த்தல் அத்துடன் ஏற்கனவே காணப்படுகின்ற பொருட்களை அகற்றுதல் என்பவற்றுடன் கூடையின் உள்ளமைப்பும் திருத்தம்செய்யப்படுகின்றது.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் அடிப்படை ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்களை (2021=100) என்ற, அதாவது தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் 2023 பெப்புருவரியிலிருந்து வெளியிட்டது. 1952இனை அடிப்படை ஆண்டாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணைப் பொறுத்தவரையில், இது சுட்டெண்ணின் நான்காவது அடிப்படை ஆண்டு மாற்றமாகக் காணப்பட்டு, 1952, 2002, 2006/07, 2013 மற்றும் 2021 தொடர்பு ஆண்டுகளுடன் ஐந்து கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் தொடர்களை உருவாக்கியுள்ள அதேவேளை தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்கு அடிப்படை ஆண்டான 2013 உடன் 2021ஆம் ஆண்டானது அதன் முதலாவது தொடரின் பின்னர் இடம்பெறுகின்ற இரண்டாவது தொடராகும். அடிப்படை ஆண்டு மாற்றத்தின் மூலம் சுட்டெண் கணிப்பு முறையியல் இற்றைப்படுத்தப்பட்டது. இதில் தற்போது நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் (2021=100) இரு கட்டங்களில் கணிக்கப்படுகின்றன. ஆரம்ப கட்டத்தில், அடிப்படையான சுட்டெண்கள் தொகுக்கப்படுகின்ற அதேவேளை உயர்மட்டச் சுட்டெண்கள் இரண்டாம் கட்டத்தில் தொகுக்கப்படுகின்றன. ஆரம்பச் சுட்டெண்கள் கேத்திரகணிதவியல் முறைகளைப் பயன்படுத்தி அல்லது ஜேவோன்ஸ் சூத்திரத்தைப் (Jevons Formula) பயன்படுத்தி தொகுக்கப்படுகின்ற அதேவேளை உயர்மட்டச் சுட்டெண்கள் யங் சூத்திரத்தைப் (Young Formula) பயன்படுத்தி தொகுக்கப்படுகின்றன. இரு நுகர்வோர் விலைச்சுட்டெண்களினதும் முக்கியத்துவக் கட்டமைப்பு, வீட்டலகொன்றுக்கு ஏற்படுகின்ற அனைத்து வகையான நுகர்வு செலவினத்தையும் உள்ளடக்கிய 2019இல் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்ட வீட்டலகு வருமானம் மற்றும் செலவின அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டது. அதற்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021=100) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021=100) இரண்டினதும் நிறைத் தொடர்பு ஆண்டு 2019 ஆகும். மேலும், 2018 சனவரி தொடக்கம் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட விலைகள் சுட்டெண்ணைக் கணிக்கும்போது விலை தொடர்பாக பயன்படுத்தப்பட்டன. சுட்டெண் 100 இற்கு சமமாக்கப்பட்ட காலப்பகுதியான சுட்டெண் தொடர்பு காலப்பகுதி 2021 ஆகும். அலுவல்சார் விலைச்சுட்டெண்களின் முக்கிய அம்சங்கள் அட்டவணை சி.கு. 6.1 இல் தரப்பட்டுள்ளன.

உணவு வகையின் நிறை குறைவடைந்த அதேவேளை, உணவல்லா வகையின் நிறை அதிகரித்தமை அடிப்படை ஆண்டு மாற்றத்தின் மூலம் இரு நுகர்வோர் விலைச்சுட்டெண்களிலும் நிறைக் கட்டமைப்பில் அவதானிக்கப்பட்ட முக்கிய மாற்றமாகும். அதற்கமைய, அடிப்படை ஆண்டு மாற்றச்செயன்முறை மூலம்

4

அட்டவணை சி.கு. 6.1


### அலுவல்சார் நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் முக்கிய அம்சங்கள்

| விடயம் | கொ.நு.வி.சு (2013=100) | கொ.நு.வி.சு (2021=100) | தே.வ.வி.சு. (2013=100) | தே.வ.வி.சு. (2021=100) |
|---|---|---|---|---|
| சுட்டெண் குறியீட்டு ஆண்டு | 2013 | 2021 | 2013 | 2021 |
| நிறை குறியீட்டு ஆண்டு | யூலை 2012 - யூன் 2013 | சனவரி 2019 - திசெம்பர் 2019 | யூலை 2012 - யூன் 2013 | சனவரி 2019 - திசெம்பர் 2019 |
| புவியியல் உள்ளடக்கம் | கொழும்பு மாவட்டத்தின் அனைத்து நகர்புறமும் | கொழும்பு மாவட்டத்தின் அனைத்து நகர்புறமும் | இலங்கையின் அனைத்து மாகாணங்களும் | இலங்கையின் அனைத்து மாகாணங்களும் |
| வீட்டலகு ஒன்றின் அளவு | 3.9 | 3.8 | 3.9 | 3.7 |
| சராசரி மாதாந்த நுகர்வு செலவு (ரூ.) | ரூ. 60,364.73 | ரூ. 91,880.34 | ரூ. 32,142.69 | ரூ. 50,728.60 |
| சுட்டெண் புள்ளி ஒன்றின் பெறுமதி | 603.65 | 918.8 | 321.43 | 507.29 |
| பிரதான வகைகள் | 12 | 12 | 12 | 12 |
| உபவகைகள் | 105 | 105 | 105 | 105 |
| பொருட்களின் எண்ணிக்கை | 392 | 426 | 407 | 485 |
| மொத்த நிறையின் சதவீதம் | | | | |
| உணவு | 28.24 | 26.23 | 44.04 | 39.22 |
| உணவல்லா | 71.76 | 73.77 | 55.96 | 60.78 |
| விலை சேகரிப்பு நிலையங்கள் | 14 | 10 | ஒவ்வொரு மாவட்ட நகரத்திலும் 3 வீதம் | ஒவ்வொரு மாவட்ட நகரத்திலும் 3 வீதம் |

*மூலம்:* தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம சி.கு. 6.1


**கொ.நு.வி.சு (2013=100) இலிருந்து கொ.நு.வி.சு (2021=100) இற்கு நிறையிடல் கட்டமைப்பில் மாற்றம்**




*மூலம்:* தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் சி.கு. 6.2


**தே.நு.வி.சு (2013=100) இலிருந்து தே.நு.வி.சு (2021=100) இற்கு நிறையிடல் கட்டமைப்பில் மாற்றம்**




*மூலம்:* தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் சி.கு. 6.3


**கொ.நு.வி.சு (2013=100) மற்றும் கொ.நு.வி.சு (2021=100) என்பவற்றின் மாதத்துக்கு மாத சதவீத மாற்றல்களின் அசைவுகள்**




*மூலம்:* தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் சி.கு. 6.4

**தே.நு.வி.சு (2013=100) மற்றும் தே.நு.வி.சு (2021=100) என்பவற்றின் மாதத்துக்கு மாத சதவீத மாற்றல்களின் அசைவுகள்**




*மூலம்:* தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் உணவு வகையின் நிறை 28.24 சதவீதத்திலிருந்து 26.23 சதவீதத்திற்கு குறைவடைந்த அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் உணவு வகையின் நிறை 44.04 சதவீதத்திலிருந்து 39.22 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அடிப்படை ஆண்டு மாற்றம் செய்கையில் பாண் (விசேட), சிறகவரை மற்றும் தர்பூசணி போன்ற பொருட்கள் உணவு வகைக்கு சேர்க்கப்பட்ட அதேவேளை நெத்தலி, நண்டு, நல்லெண்ணெய் போன்ற பொருட்கள் அகற்றப்பட்டன. அதேவேளை கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலும் உணவல்லா வகையின் நிறை முறையே 71.76 சதவீதத்திலிருந்து 73.77 சதவீதத்திற்கும் 55.96 சதவீதத்திலிருந்து 60.78 சதவீதத்திற்கும் அதிகரித்தது. அடிப்படை ஆண்டு மாற்றத்தின் மூலம் மேசைகள், ஆடைகளுக்கான தையல் கட்டணங்கள் போன்றன உணவல்லா வகைக்கு சேர்க்கப்பட்ட அதேவேளை சுருட்டு, உருக்கு அலுமாரி, உலர்ந்த பெட்டரிகள் போன்ற பொருட்கள் அகற்றப்பட்டன. வீடமைப்பு, நீர், மின்சாரம், வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் உணவு மற்றும் மதுசாரமல்லா குடிபானங்கள் அத்துடன் போக்குவரத்து துணை வகைகள் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் தேசிய விலைச்சுட்டெண்கள் இரண்டின் அடிப்படை ஆண்டு மாற்றத்தின் மூலம் அவற்றின் செலவினப் பெறுமதியின் பொருட்களில் முன்னுரிமை வகைகளாக தொடர்ந்தும் காணப்படுகின்றன.

இரு விலைச்சுட்டெண்களின் நியதிகளிலும் சுட்டெண் ஒன்றையொன்று மேவும் காலம், 2022 சனவரிக்கும் 2022 திசெம்பருக்கும் இடைப்பட்டதாகும். அதற்கமைய, அவற்றின் தற்போதைய மற்றும் முன்னைய அடிப்படை காலப்பகுதியுடனான நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் இரண்டினதும் மாதத்திற்கு மாத சதவீத மாற்றங்களின் ஒப்பீடு சி.கு. 6.3 மற்றும் சி.கு. 6.4 ஆம் வரைபடங்களில் காண்பிக்கப்பட்டுள்ளன. இவ்வரைபடங்களின் பிரகாரம், அடிப்படை ஆண்டுகளுக்கிடையிலான வேறுபாடுகள் இரண்டு அடிப்படைகளின் கீழும் நிறைக் கட்டமைப்பு மற்றும் பொருட்கள் அத்துடன் பணிகள் கூடைகளின் உள்ளமைப்பு என்பவற்றின் சிறிதளவான வேறுபாடுகளின் காரணமாக பெருமளவில்

மிகக்குறைவானதாகும். எவ்வாறிருப்பினும், பல்வேறு பொருளாதார முகவராண்மைகளினாலும் பொருளாதார தீர்மானமெடுத்தல் செயன்முறை நியதிகளில் நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் முக்கிய பங்காற்றுவதால் நிலவுகின்ற நுகர்வு விதங்கள் துல்லியமாக பிரதிபலிக்கின்றனு என்பதை உறுதிசெய்வதற்கு குறித்த கால இடைவெளிகளில் நுகர்வோர் விலைச்சுட்டெண்களுக்கு அடிப்படை ஆண்டு மாற்றச்செய்வது மிகவும் முக்கியமானதாகும்.

உசாத்துணை


1. *Department of Census and Statistics. A Briefing on the Rebased Colombo Consumer Price Index (Base 2021=100) for Sri Lanka. Available at: http://www.statistics.gov.lk/InflationAndPrices/StaticalInformation/MonthlyCCPI/Techinical_Note*

2. *Department of Census and Statistics. A Briefing on the Rebased National Consumer Price Index (Base 2021=100) for Sri Lanka. Available at: http://www.statistics.gov.lk/InflationAndPrices/StaticalInformation/NCPI/NCPITecnical Note*


4